இப்போது தாமதம் ஏற்பட்டிருக்கிறது. மரக்காணத்தில் சில ஆண்டுகளாக கேட்டுக்கொண்டிருந்ததன் காரணமாக இப்போது ஓரளவு ஒப்புக்கொண்டு புதுக் கட்டடம் வருவது வரை அங்கேயே நடத்திக் கொண்டு வரலாம் என்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

* 334 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு, திரு. எ. சுவாமிதாஸ் } கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன ?

(இ) டாக்டர்கள் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) இந்த மாநிலத்தில் 1—7—1966-ல் உள்ளபடி, 203 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. அவைகளில் 18 நிலையங்களில் டாக்டர்களை நியமித்திருந்தும், 25 நிலையங்களில் டாக்டர்கள் இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இருபத்தைந்து நிலையங்களில் டாக்டர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். டாக்டர்கள் இல்லாத நிலையங்களில் எல்லாம் எப்படி நிர்வாகம் நடத்தப்பட்டு வருகிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : டாக்டர்கள் இல்லாத நிலையங்களில் எல்லாம் பக்கத்திலுள்ள ப்ளாக்கிலிருந்து டாக்டர் வந்து அப்போதைக்கப்போது அடிஷனல் சார்ஜாக இருக்கிறார்.

*335 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1965 ஏப்ரல் 14-ல் சுகாதார பிரிவில் இருந்து கரம்பக்குடியில் உள்ள சர்க்கார் டிஸ்பென்சரியை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றுவதற்கான உத்திரவு ஏற்கெனவே பிறப்பித்துவிடப்பட்டுவிட்டது என்ற வந்த உத்திரவை அமல்படுத்தாததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : A statement [a] is placed on the Table of the House.

*336 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், இலுப்பூரில் உள்ள டிஸ்பென்சரியை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றவேண்டி, அப்பகுதி பொது மக்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அண்மையில் கோரிக்கைகள் வந்தனவா ?

---

a Printed as Appendix VI on pages 105.

2nd November 1966]

(இ) அதன் மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இலுப்பூரில் உள்ள டிஸ்பென்சரியை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற கோரிக்கைகள் இதுவரையில் அரசாங்கத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

* 337 **கேள்வி.—திருமதி செகதாம்பாள் வேலாயுதம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உடையார்பாளையம் தாலுக்காவில் எத்தனை இடங்களில் (Primary Health Centres) ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

(இ) எப்போது இவைகளுக்கான வேலைகள் மேற்கொள்ளப்படும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) திருமானூர், அரியலூர், டி. பாலூர், செந்துறை ஆகிய இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. ஜெயங்கொண்டானில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. டாக்டர் நியமிக்கப்பட்டவுடன் அது செயல்படத் தொடங்கும். ஆண்டிமடம் வளர்ச்சி வட்டாரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை ஏற்படுத்த 1966 ஜுலையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருமதி செகதாம்பாள் வேலாயுதம் : தலைவர் அவர்களே, ஆண்டிமடத்தில் ஏற்பட இருக்கிறது என்றார்கள். ஜெயங்கொண்டானில் மருத்துவ மனை வருவதுபற்றி இரண்டு, மூன்று முறை கேட்டும் விமோசனம் இல்லை. அங்கு கட்டடம் கட்டுவது எப்படியிருக்கிறது ? பெரிய மருத்துவ மனையாக ஆக்குவதுபற்றிக் கவனிக்கப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஜெயங்கொண்டானில் மின்சுருட்டியில் வைக்கவேண்டும் என்று போட்டிருக்கிறது.

கட்டுமரத்திற்குத் தேவையான காட்டுவகை மரம்

* 338 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கட்டுமரத்திற்குத் தேவையான அல்பிஸியா மரம் நமது ராஜ்யத்தில் எங்கேனும் பயிர் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?